**சிவகங்கை விற்பனைக்குழு, செயலளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திருமதி.பா.சாந்தி, எம்.எஸ்ஸி (விவ),**

**ந.கோ.ஆ/1203/2021** **நாள்.23.12.2022.**

பொருள்: பணியமைப்பு – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – சிவகங்கை விற்பனைக்குழு, சிவகங்கை – சிவகங்கை விற்பனைக்குழுவில் காலிப்பணியிடமாக உள்ள இளநிலை உதவியாளர் பணியில் ஒட்டுமொத்த மூதுரிமை பட்டியல் படி – திரு.நா.சரவணக்குமார் அவர்களுக்கு இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை எண்.978, வேளாண்மைத்துறை நாள்.23.05.1985.
2) அரசாணை எண்.43 P & AR (Per B) Dept Dt.15.02.1994.
3) ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை அவர்களின் கடித எண்.விகுப.3/7499/2006, நாள்.09.01.2009.
4) இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை அவர்களின் கடித எண்.விகுப.3/4728/2016, நாள்.23.02.2016.
5) இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள்.02.12.2021.

**ஆணை:-**

பார்வை (2)ல் காணும் அரசாணையின்படியும், பார்வை (3) மற்றும் (4)ல் காணும் ஆணையர் அவர்களின் அறிவுரைகளை பின்பற்றியும் சிவகங்கை விற்பனைக்குழுவில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஒட்டுமொத்த மூதுரிமை பட்டியல்படி, பார்வை (5)ல் காணும் செயல்முறை ஆணையின்படி, திரு.நா.சரவணக்குமார் அவர்களுக்கு இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, தனியர் 03.12.2021 முற்பகல் முதல் காரைக்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூட இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியில் இணைந்து பணியாற்றி வருகிறார்.

பார்வை (1)ல் கண்டுள்ள அரசாணையின் அடிப்படையில், செயலாளர் அவர்களே நியமன அலுவலர் என்ற முறையில் இளநிலை உதவியாளர் பதவியில் தனியருக்கு கீழ்கண்டவாறு கலம் (4)ல் குறிப்பிட்டுள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் இடம் | பணியில் சேர்ந்த நாள். | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள். |
|---|---|---|---|
| 1. | திரு.நா.சரவணக்குமார், இளநிலை உதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், காரைக்குடி. | 03.12.2021 மு.ப. | 03.12.2021 மு.ப. |

த.பி.பா…

மேற்படி தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 03.12.2021 மு.ப. முதல் தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண்பருவத்தில் வைத்தும், மேலும் தனியர் தகுதிகாண் பருவகாலத்தில் தேர்வாணையத்தால் நடத்தப்படும்

1) வேளாண்மை விற்பனை துறைத் தேர்வு
2) மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு

மற்றும் பவானிசாகர் பயிற்சி மையத்தால் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி தேர்வில் தவறாது தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

23/12/22

செயலாளர்,
சிவகங்கை விற்பனைக்குழு,
சிவகங்கை.

23/12/22

பெறுநர்:-

திரு.நா.சரவணக்குமார்,
இளநிலை உதவியாளர்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
காரைக்குடி.

நகல்:-

1) விற்பனைக்கூட கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், காரைக்குடி.
2) அ – பிரிவு (இவ்வலுவலகம்)
3) பணிப்பதிவேட்டிற்கு.